2015 ஆகஸ்ட் 24] [பேரவைத் தலைவர்]

திரு. ச. சங்குமுத்து தேவர் அவர்கள் 1971 முதல் 1976 வரை அம்பாசமுத்திரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. கு. தங்கமுத்து அவர்கள் 1991 முதல் 1996 வரை திருவோணம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

3. இரங்கல் தீர்மானங்கள்

(அ) பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம், இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கல் தீர்மானங்கள். பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம், இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்கள் மறைவு குறித்து.*

'இந்தியாவின் ஏவுகணை நாயகன்' என்றும், 'அணுசக்தி நாயகன்' என்றும், 'தலைசிறந்த விஞ்ஞானி' என்றும், 'திருக்குறள் வழி நடப்பவர்' என்றும், 'இளைஞர்களின் எழுச்சி நாயகன்' என்றும் போற்றப்படுபவரும், தன்னுடைய பொன்மொழிகளாலும், கவிதைகளாலும், எழுத்துக்களாலும், தனது எளிமை மற்றும் மென்மையான அணுகுமுறையினால் அனைவரது மனதிலும் நீங்கா இடம் பிடித்தவரும், நாட்டின் பதினோராவது குடியரசுத் தலைவராக இருந்தவரும், தமிழகத்தின் மண்ணின் மைந்தருமாகிய, பன்முகத் தலைவர், பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் 27–7–2015 அன்று,

[பேரவைத் தலைவர்] [2015 ஆகஸ்ட் 24

தனது 83–வது அகவையில் திடீரென மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இராமேஸ்வரத்தில் ஓர் ஏழைக் குடும்பத்திலே பிறந்து, தமது கடின உழைப்பினாலும், ஒருமுக சிந்தனையாலும், விடா முயற்சியாலும் சிறந்த விஞ்ஞானியாகத் திகழ்ந்ததோடு, அனைத்துத் தரப்பு மக்களாலும் போற்றப்படும் குடியரசுத் தலைவராக விளங்கினார்.

குடியரசுத் தலைவராக இருந்தபோதும், அதன்பின்னரும், அவரது சிந்தனை எப்பொழுதும் மாணாக்கர்கள், இளைஞர்கள் ஆகியோரைப் பற்றியே இருந்தது. 2020 ஆம் ஆண்டுக்குள் இந்தியா வல்லரசாக வேண்டுமென்று கனவு கண்டவர். இந்தியா வல்லரசாக உருவெடுக்க மாணாக்கர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கும்விதமாக, 'கனவு காணுங்கள்; அது உறக்கத்தை விரட்டும் கனவாக இருக்க வேண்டும்' என்றும், 'வெற்றி பெற வேண்டுமென்றால், பதட்டமில்லாமல் இருப்பதுதான் வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி' என்றும் வெற்றியின் இரகசியத்தை மாணாக்கர்களுக்குப் போதித்தார். இளைய தலைமுறையினரும், மாணாக்கர்களும் இந்தியாவின் வளர்ச்சிக்குச் சிறந்த பங்காற்றிட உந்துசக்தியாக விளங்கினார். அன்னாரது பிறந்த தினம் இளைஞர் எழுச்சி நாளாக தமிழக அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அன்னாரது நினைவைப் போற்றும்விதமாக, 'டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் விருது' சுதந்திரத் தினத்தன்று தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்ினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) திரு. பூ. செந்தூர் பாண்டியன், முன்னாள் அமைச்சர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பூ. செந்தூர் பாண்டியன், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மற்றும் தமிழக முன்னாள் அமைச்சர் அவர்கள் மறைவு குறித்து.

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினராக 2011 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவரும், விவசாயக் குடும்பத்திலே